முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண். 173 /2016

நாள்: 11.02.2026

பெயர்: மோகன் (பி.வா.சா.1) த/பெ:பக்கிரிசாமி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை...</u>

1. நானும் 1ஆம் பிரதிவாதியும் சகோதரர்கள் என்றால் சரிதான். வாதியின் குடும்பத்திற்கும் என்னுடைய குடும்பத்திற்கும் நேரடியாக உறவுமுறை இல்லை என்று சொன்னால் எனது அம்மா வழி உறவு. தாவா சொத்தின் சர்வே எண் 85/18 என்றால் சரிதான். அதன் விஸ்தீரணம் 38 சென்ட் என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் கோவிந்தசாமி மனைவி லோகாம்பாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். லோகாமபாளுக்கு 1. கமலம் அம்மாள் 2. சரோஜா 3. சாவித்ரி 4.காசியம்மாள் 5. ராசாத்தி என்ற மகள்களும் 1. சிவசாமி 2. காசிநாதன் என்ற மகன்களும் வாரிசுகள் என்றால் சரிதான். லோகாம்பாள் அவரது வாரிசுகள் அனைவருக்கும் சீர்வரிசை செய்து திருமணம் செய்து வைத்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. அனைத்து வாரிசுகளும் திருமணத்திற்கு பிறகு வெவ்வேறு ஊரில் தான் வசித்து வருகிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். லோகாம்பாள் தனது மூத்த மகள் கமலம் அம்மாளுக்கு கரடிகுளத்தில் திருமணம் செய்து கொடுத்தார் என்றால் திருமணம் செய்து கொடுத்த விபரம் எனக்கு தெரியாது. எனக்கு விபரம் தெரிந்த காலத்தில் இருந்து அவர் கரடிகுளத்தில் தான் வசித்து வருகிறார். லோகாம்பாள் பிறந்த ஊர் கரடிகுளமா என்றால் எனக்கு தெரியாது. வாதியின் தகப்பனார் பிறந்த ஊர் கரடிகுளம் என்று சொன்னால் சரிதான். கமலம் அம்மாளுக்கும் கிருஷ்ணனுக்கும் பிறந்த வாரிசு வாதி மற்றும் பெண் வாரிசுகள் 1. வாசுகி (இறந்து விட்டார்) 2. கண்ணகி 3. மணிமேகலை 4. மண்டோதரி.

3. தாவா சொத்தை லோகாம்பாள் தனது மகளான கமலம்மாளுக்கு 1976 ஆம்

ஆண்டு கொடுப்பதாக சொன்னார்களா என்றால் எனக்கு தெரியாது. கமலம் அம்மாள் தனது பெயருக்கு எழுதிகொடுக்க வேண்டாம் என்றும் தாவா சொத்தை வாதி பெயருக்கு எழுதி கொடுக்கும் படி கூறிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அதனால் லோகாம்பாள் 01.11.1976 ல் வாதி மைனராக இருந்ததால் கமலம் அம்மாளை வாதிக்கு கார்டியனாக நியமித்து தாவா சொத்தை யும் மற்றும் சில சொத்துக்களையும் பொறுத்து தான செட்டில்மென்ட் பத்திரம் எழுதி பதிவு செய்தார் என்றால் அந்த விபரம் வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் எனக்கு தெரியும். செட்டில்மென்ட் எழுதி வைத்த விபரம் எனக்கு முன்பே தெரியும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் 3வது பத்தியில் 1.11.1976 ல் தாவா சொத்தை பொறுத்து வாதியின் தாயாரை கார்டியனாக கண்டு தானசெட்டில்மென்ட் எழுதிவைத்தாக கூறியுள்ளது ஒப்புக்கொள்ளப்படுகிறது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் 4வது பத்தியில் தாவா சொத்து வாதி மைனராக இருந்த வரை வாதியின் தாயார் அனுபவித்து வந்தார் என்பதும் வாதி மேஜரான பிறகு வாதி அனுபவித்து வந்தார் என்பதும் மட்டும் உண்மை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒப்பம்/-மோகன்

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி,
என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து
காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு
கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/-S.தனலெட்சுமி
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஜெயங்கொண்டம்